செய்தி வெளியீடு எண். 223 நாள்: 28.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை எடுத்துச் செல்வது மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து கலப்பட மணலை கொண்டு வருவோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வாகனங்களில் எடுத்துச் செல்வது தொடர்பாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களது உத்தரவினபேரில், இம்மாவட்டத்தில் ஆற்றுப்புறம்போக்கு, அரசு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கனிமங்களை ஏற்றிச்சென்ற குற்றத்திற்காக, வருவாய் துறையினர், கனிமவளத்துறையினர் மற்றும் காவல் துறையினர் ஆகியோரால் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017 வரையிலான காலத்தில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், 791 வாகனங்கள் மற்றும் 259 மாட்டு வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக. கனிமவள விதிகளின்படி அபராத தொகையாக சுமார் ரூ. 1,83,00.000/- -ஐ அரசுக்கணக்கில் வசூலிக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்செயல் தொடர்பாக 2 நபர்கள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும். சுமார் 521 நபர்கள் மீது காவல்துறையினரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஆந்திர மாநிலம் சிங்காவரம் போன்ற கடல் பகுதியில் உள்ள உப்பு மணலை தமிழகத்திற்கு கொண்டு வந்து கட்டுமான பயன்பாடடிற்காக விற்பனை செய்வதாக புகார் மனுக்கள் வரபபெற்றுள்ளது. இவ்வாறு தரம் குறைந்த கலப்பட மணலை கட்டுமான பயன்பாட்டிற்கு விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். எனவே, இக்கலப்பட மணலை ஏற்றிச்செல்லும் வாகனங்களை கைப்பற்றிடுமாறும், சம்மந்தப்பட்ட வாகன ஓட்டுநர் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வருவாய்துறை, கனிமவளத்துறை மற்றும் காவல்துறையினருக்கு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

கள்ளத்தனமாக கனிமங்கள் எடுப்பது குறித்த தகவல்களை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் இயங்கும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1077, தொலைபேசி எண். 044-27665248, கைபேசி எண்.7548846801 மற்றும் வாட்ஸ் அப் எண்.7548846803, தொலைபேசி-கைபேசி எண்கள் மற்றும் வாட்ஸ் அப்பில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார்கள் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~